மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Tanjore Litigation in Poruppu Novel

Dr. C. Markandan

Associate Professor, Department of Tamil, Vels University, Pallavaram, Chennai, India

Manuscript ID : **MT116A0163**

Volume : **4**

Issue : **2**

Month : **June**

Year : **2024**

Received: 12.04.2024
Revised: 24.04.2024
Accepted: 20.05.2024
Published: 13.06.2024

Pages : 01-07

DOI: 10.5281/zenodo.11632903

ABSTRACT:

Human life is full of language. The movements of life give rise to various changes and formations in language. In this way, Tanjore Local Case Words, Proverbs, Rituals, Beliefs found in the novel can be known. All manners of life are devised and put into practice by man. Such norms are created and observed by man in various situations. Morals of life are those that arise out of the multifaceted expression of human emotions. To examine how the novel in charge of such norms of life has recorded the Ritualistic Life of the people of Tanjore is the primary objective.

KEYWORDS:

Litigation, Folklore, Hope, Proverbs, Principles of Life, Litigation words

பொறுப்பு நாவலில் தஞ்சை வழக்காற்றியல்

முனைவர் செ. மார்கண்டன்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் பல்கலைக்கழகம், பல்லாவரம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மனித வாழ்க்கை மொழியால் நிறைந்திருக்கிறது. வாழ்க்கையின் நகர்வுகள் மொழியில் பல்வேறு மாற்றங்களையும் ஆக்கங்களையும் தோற்றுவிக்கின்றன. அவ்வகையில் பொறுப்பு நாவலில் காணப்படும் தஞ்சை வட்டார வழக்குச் சொற்கள், பழமொழிகள், சடங்குகள், நம்பிக்கைகள், வாழ்வியல் நெறிகளை அறிய முடிகிறது. வாழ்க்கை நெறிகள் அனைத்தும் மனிதனால் வகுத்துக்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டவையாகும். இத்தகைய நெறிகள் பல்வேறு சூழ்நிலைகளில் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டவைகள் ஆகும். மனித உணர்ச்சிகளின் பன்முக வெளிப்பாட்டில் தோன்றியவைகள்தான் வாழ்வியல் நெறிகள். இத்தகைய வாழ்வியல் நெறிகளை பொறுப்பு நாவல் தஞ்சை மக்களின் வழக்காற்றியல் வழியான வாழ்வியலை எவ்வாறு பதிவுச் செய்துள்ளது என்பதை ஆராய்வது முதன்மையான நோக்கமாகும்.

கருச்சொற்கள்

வழக்காற்றியல், நாட்டுப்புறவியல், நம்பிக்கைகள், பழமொழிகள், வாழ்வியல் நெறிகள், வழக்குச் சொற்கள்.

முன்னுரை

தஞ்சை மாவட்ட மக்களின் வட்டார வழக்காற்றியியலை மையமாகக் கொண்டு மண்வாசனை மாறாத மொழிநடையில் **“பொறுப்பு”** நாவல் எழுதப்பட்டுள்ளது. தஞ்சையைச் சார்ந்த வாழ்விடங்களைக் கொண்ட மக்களின், வாழ்வியல் கூறுகளைச் சித்திரிப்பதாக இந்நாவல் இயற்றப்பட்டுள்ளது. மக்களின் மன உணர்வுகளை உணர்ச்சி மாறாமல் சொற்களாய் வடித்துக் கொடுத்துள்ளார் சி.எம். முத்து. வட்டார வழக்கின் இயல்பை உள்ளவாறே பதிவு செய்துள்ள இந்நாவலில், தஞ்சை வழக்காற்றியல் ஆதிக்கம் செலுத்தி உள்ளது என்பதை ஆராயும் நோக்கமாக இக்கட்டுரை களம் காண விழைகிறது.

வழக்காற்றியல் விளக்கம்

வழக்காற்றியல் என்பது மண் சார்ந்த மக்களின் வாழ்வியல் நெறிகளை உள்ளடக்கியவையாகும். நாட்டாரியல் அல்லது நாட்டுப்புறவியல் (Folklore) என்பது நாட்டார் மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கைகள், இலக்கியங்கள், கதைகள், பழமொழிகள், வாய்மொழி வரலாறு, விடுகதைகள், வாய்மொழி பாடல்கள், கலைகள், சடங்குகள் போன்ற மனித வாழ்வின் ஒட்டுமொத்தத் தொகுப்பை 'வழக்காற்றியல்' என்னும் சொல் தனதாக்கிக் கொண்டுள்ளதை அறியலாம். இப்பொருண்மையில் பொறுப்பு நாவலின் வழக்காற்றியல் ஆராய்ப்பட உள்ளது.

சடங்கு நம்பிக்கை

செவ்வாய் தோஷமுள்ள ஜாதகத்தைக் கொண்ட மணமகனோ அல்லது மணமகளோ அதேபோல் செவ்வாய் தோஷம் கொண்டவரையே திருமணம் செய்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் குடும்பத்திற்கு ஆகாது என்ற பொதுவான நம்பிக்கை இருந்துள்ளதை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது. வாஞ்சிநாத மங்கொண்டார் தன் மகனுக்கு சொந்த மச்சான் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க நினைத்து இருவரின் ஜாதகத்தையும் எடுத்துச்சென்று சோதிடரிடம் காட்டுகிறார். பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் உள்ளதாகக் கூறவே தன் மகனுக்கு வேறு பெண்ணை பார்த்துப் பேசிமுடித்துத் திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார். குடும்ப நலனுக்காக இவ்வாறு செய்கிறார். **“அடிப்படையான மத நம்பிக்கைகள், சடங்குகள், நடைமுறைகள், ஆகியன இயற்கை ஏற்படுத்தும் தடங்கல்களை மனிதன் வெற்றி கொள்ளவும், சமூகப் பிரச்சனைகளில் சகமனிதன் ஏற்படுத்தும் பிரச்சினைகளை வெற்றி கொள்ளவுமான தொடர்ச்சியான போராட்டத்தில் தோன்றி வளர்கின்றன”**[1] என்னும் ஆர்.எஸ்.சர்மாவின் கூற்று இவ்விடத்தே ஒப்பு நோக்கத்தக்கது.

மங்கொண்டார் பெண்பார்க்கச் செல்லும்போது தன் மச்சானை அழைக்காமல் செல்லவே ஊர் பெரியவர்கள், **“அதையெல்லாம் இப்ப நெனச்சி என்னா பண்றது தம்பி? நீங்களா ஓங்க மச்சினன் பொண்ணைப் புள்ளக்கிக் கட்டி வைக்க மாட்டனு சொன்னீங்க. பிரம்மன் அவுரு பொண்ணு தலையில இப்டி எளுதுவான்னு ஆர் நெனச்சா சொல்லுங்க? செவ்வாதோசத்துல பொண்ணைப் பெத்தவனோட கதி இப்டிச் சீரளிஞ்சி நிக்கிறதுதான. அதப்பேசி ஆவப் போற சோலியச் சொல்லுங்க பாப்பம்?”**[2] என்று சொல்கிறார்கள்.

மங்கொண்டாரின் மச்சினனும் தங்கையும் உறவு விட்டுப்போகாமல் இருக்க, செவ்வாய் தோஷத்திற்கு பரிகாரம் செய்துவிட்டு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்கின்றனர்.

“பொல்லாத ஜோசியர் பொண்ணுக்குச் செவ்வாதோஷம், புள்ளக்கி ஆகவே ஆகாது என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டானே. பிள்ளையைப் பெத்தவரின் மனசும் பெண்ணைப் பெத்தவரின் மனசும் ஒன்றாகவே இருந்தாலும் ஜோசியக்காரரின் மனசு வேறு தினுசாய் இருக்கிற பட்சத்தில் எந்தக் காரியம் நடந்துவிடப் போகிறது. செவ்வாய் தோஷத்திற்கு ஆக்கினைகள் பண்ணி விட்டுப் பெண்ணைப் பிள்ளைக்கு எடுத்துக்கொள்ளலாம்”[3] என்கின்றனர் மங்கொண்டாரின் மச்சினனும் தங்கையும்.

இந்நாவலின் ஆசிரியரும் செவ்வாய் தோஷம் குறித்த நம்பிக்கையைப் பற்றி பின்வருமாறு விளக்குகிறார். **“உறவு கெட்டிப்படும் என்ற அவர்களின் ஆசையில் தப்பில்லைதான். செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணைச் செவ்வாய் தோஷம் இல்லாத பிள்ளைக்குக் கட்டி வைத்து அதனால் பெண்ணுக்கோ பிள்ளைக்கோ விளையக் கூடாத விளைவு ஏற்பட்டு விடும் பட்சத்தில் இழப்பை யாரால் ஈடுகட்ட முடியும்? இதில் உறவு முக்கியமா? வாழ்க்கை முக்கியமா? ஆக்கினைகளெல்லாம் செவ்வாய் தோஷத்திற்கு நிவர்த்தியில்லை என்பதைப் பல ஜோசியர்கள் அடித்துப் பேசுகிறார்கள். மங்கொண்டாரிடம் பண்ணலாம் என்று மச்சினன் கச்சி பண்ணுகிறார். கண் தெரிந்து கிணற்றில் இறங்குவதா? எது நடந்த போதிலும் மங்கொண்டாருக்குக் கண்தெரிந்து கிணற்றில் இறங்கப் பிரியமில்லை”**[4] என்கிறார் நாவலாசிரியர் முத்து. செவ்வாய்தோஷம் பற்றிய நம்பிக்கையை “கண்தெரிந்து கிணற்றில் இறங்குவதா” என்று ஆசிரியரின் கருத்தாகக் கூறுவதிலிருந்து ஜோதிடத்தின் மீதுள்ள வலுவான நம்பிக்கை வெளிப்படுகின்றது. சமூக நம்பிக்கைக்காக உறவுகளை இழக்கக்கூட தயாராக இருந்துள்ளனர். ஆனால் அத்தகைய இழப்பு குடும்ப நலன் கருதி என்று நம்பியதன் விளைவே ஆகும்.

பெண் வாழ்வியல் நெறி

பொறுப்பு நாவலில் வரும் சரசு, மங்களாம்பாள், ரஞ்சிதம், கோதை நாயகி ஆகிய குடும்பத் தலைவிகள் நால்வரும் ஒரே மாதிரியான குணநலம் கொண்டவர்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர். வீட்டிற்கு மனிதர்கள் யாரேனும் வந்தால் கதவு வெளி சந்திலிருந்தே எட்டிப் பார்ப்பவர்களாகவும், வெளியில் வராமல் உள்ளிருந்தே பதில் கூறுபவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் வெளிப்படையாகப் நினைத்ததைப் பேசுகிற உரிமைகளை அவர்கள் வீட்டு ஆண்கள் அவர்களுக்குக் கொடுத்துள்ளனர். ஆகவே அப்பெண்கள் தங்களுக்கென ஒரு வட்டத்தை அமைத்துக் கொண்டாலும் சுதந்திரமாக பேசும் உரிமை மற்றும் இயங்கும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். சில நேரங்களில் கணவன் செய்வது தவறு எனத் தெரிந்ததும், சுட்டிக்காட்டத் தயங்காதவர்களாகவும் இருக்கின்றனர். ஆகவே இந்நாவலில் கூறப்பட்டுள்ள குடும்பத்

தலைவிகள் மரியாதையுடனும் கட்டுப்பாடுகளுடனும் கூடிய ஒரு வெளியை அமைத்துக்கொண்டு அதனுள் இயங்குபவர்களாக இருக்கின்றனர் என்பதை இந்நாவல் புலப்படுத்துகின்றன.

பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதென்பது வழக்கமாக இருந்திருக்கிறது. ஊரிலுள்ள பெண்கள் மங்கொண்டாரின் வீட்டிற்கு வந்திருந்தபோது, **“ஊர்ப் பொம்பளைகளும் கூட இவர்களுடைய சம்பாஷணைகளைக் கேட்க ஆவல்பட்டுத்தான் மங்கொண்டார் வீட்டுக்குள் புளியாய் அடைந்து கிடக்கிறார்கள்”**[5] என்கிறார் நாவலாசிரியர். ஆசிரியரின் கருத்தைக் கூறுமிடங்களிலும் வட்டார வழக்கிலேயே கூறும் பாங்கு கிராமத்து வாசனையை மேலும் மிளிரச்செய்கிறது.

“பொதுவாக இந்த கிராமத்துப் பெண்கள் தங்களுக்குள் இயற்கை சுபாவத்திலேயே கட்டுப்பட்டவர்களாய் இருக்கப் பழகிக்கொண்டிருக்கிறார்கள். அநேகமாக இந்த ஊருக்குள் பெண்களைத் தெருப்பக்கத்திலோ திண்ணைப் பக்கத்திலோ அசந்துக்கூடப் பார்த்து விட முடியாது. பெரும் பகுதி வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறதிலோ ஆம்பிளைகள் வயல் வெளிகளுக்குப் போண்விடுகிற தருணங்களில் திண்ணைப் பக்கம் வந்து பக்கத்து வீட்டுப் பெண்களைச் சேர்த்துக்கொண்டு வம்பு பேசுகிறதோ, சந்தோஷப் பேச்சுப் பேசுகிறதோ நடக்கிறது”[6] என்று கிராமத்துப் பெண்களின் இயல்புகளைப் பதிவு செய்கிறார் ஆசிரியர்.

இவ்வாறு பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாலும் பெண்களுக்கென்று தனி சுதந்திர வெளியை கொடுத்திருந்தனர் என்பதையும் பதிவு செய்கிறார். இதனைத் **“தமிழர்களது பண்புகளும் கலாசாரங்களும் எப்படிப்பட்டவை என்பதற்கு இந்த மாதிரிப் படிப்பு வாசனையறியாத பெண்களே முன்னுதாரணமாய் இருக்கிறார்கள். இவர்களை ஆம்பிளைகள் யாரும் கட்டுப்படுத்தியதில்லை. இயற்கை சுபாவத்திலேயே ஒடுங்கி, கூசி, நாணிக் கோணிக்கொள்கிறதைப் பார்த்து தமிழர்களது கலாச்சாரங்களும் பண்புகளும் ஏற்பட்டதா? அல்லது கலாசாரங்களையும், பண்புகளையும் புரிந்துகொண்டு பெண்கள் இப்படி நடக்கக் கற்றுக் கொண்டார்களா? என்பது பெண்களுக்குத்தான் வெளிச்சம்.”**[7] என்னும் ஆசிரியரின் வரிகள் விளக்கிக் கூறுகின்றன.

ஆண்கள் பெண்களுக்கு வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று எந்தவித கட்டுப்பாடுகளை விதிக்காவிட்டாலும் பெண்களே தங்களுக்கான சுயகட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு கலாச்சாரத்தையும் பண்புகளையும் காக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளனர் என்பதை ஆசிரியரின் கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

பொறுப்பு நாவலில் பழமொழிகள்

பழமொழிகள் என்பவை ஒவ்வொரு சமூகத்தின் வாழ்வியலை உள்ளடக்கிய ஆவணங்கள். தமிழ் மொழி பேசும் மக்களிடையே உள்ள மொழி வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றது. மனிதன் தான் அனுபவித்து உணர்ந்த அனுவபங்களை பிறருக்கு எடுத்துக் கூறி நல்வழிப்படுத்த விழைந்ததன் விளைவாகவே பழமொழிகள் உருவாகின. பொறுப்பு நாவலில் பின்வரும் பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. **“துரும்பக் கிள்ளி போட்டு நீதான் மாப்ளன்னு கூப்ட்டா அது ஒரு துள்ளு துள்ளுமாம்”**[8]

இப்பழமொழி மாப்பிள்ளையின் மனநிலையை மிகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. புது மாப்பிள்ளை என்றாலே சாதாரணமாக மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் காணப்படுவர் என்னும் பொதுப்புரிதலை இப்பழமொழி விளக்குகின்றது. **“கட்டுக் கலங்காணும் கதிர் விளையும் கம்பர் நத்தம்”**[9] இத்தொடர் கம்பர் நத்தம் என்னும் கிராமத்தின் இயற்கை வளத்தையும், கம்பன் பிறந்த ஊர் இது என்னும் வரலாற்றுக் குறிப்பையும் உணர்த்துவனவாக உள்ளது. நெற்பயிர் அதிகமாக விளைந்த ஊர் கம்பர் நத்தம் என்பதை இதன் மூலம் உணரலாம்.

தஞ்சை வழக்குச் சொல்

மொழி என்பது ஊருக்கு ஊர் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும். அவ்வாறு வேறுபடுவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. மக்களின் வாழ்வியல் சார்ந்தும் வாழிடம் சார்ந்தும் மொழி மாற்றம் ஏற்படும். பொறுப்பு நாவல் முழுவதுமே வட்டார வழக்குச் சொற்களால் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்தில் வாழும் மக்களால் பேசப்படும் மொழியே வட்டார வழக்காக அடையாளம் காணப்படுகின்றன. அவற்றுள் இன்றியமையாத சில சொற்களை இங்கு காண்போம்.

இஞ்ச - இங்கு

தஞ்சை வட்டார வழக்கில் இங்கு வா என்று அழைக்க இஞ்ச வா என்பர். இங்கு என்னும் சொல் திரிந்து “இஞ்ச” என்று வழங்கப்படுகின்றது. **“பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்குமிடையேயுள்ள வேறுபாடு வரவர விரிந்து வருகிறதென்பதுண்மையே. அன்றும் இன்றும் இவ்விரு வழக்குகளிடையே ஒரு போராட்டம் இருந்துகொண்டுதான் வருகிறது. பேச்சு மொழியிலிருந்து தரமானவற்றை மட்டும் சிறுகச் சிறுக எழுத்து வழக்கு காலந்தோறும் ஏற்று வருகிறதென்பதும் உண்மையே.”**[10] என்னும் கருத்து பேச்சு வழக்குச் சொற்களின் இன்றியமையாமையைத் தெரிவிக்கிறது.

சோலி - வேலை

சாதாரணமாக கிராமங்களில் பேசும்போது உன் சோலிய பாத்துக்கிட்டு போ என்று கூறுவர். சோலி என்னும் சொல்லுக்கு வேலை என்பது பொருள்.

ஆக்கிணைகள் - பரிகாரம்

மங்கொண்டார் தன் மகனுக்கு மச்சானின் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க எண்ணினார். சோதிடரிடம் சென்று பார்த்தபோது செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணைக் கட்டினால் பையனுக்கு ஆகாது என்று கூறவே, மங்கொண்டாரின் மச்சினன், செவ்வாய் தோஷத்திற்கு **"ஆக்கிணைகள்"** செய்துவிட்டு பெண்ணை பிள்ளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூறியுள்ளார். ஆகவே ஆக்கிணைகள் என்பதற்கான பொருள் பரிகாரம் என்று தெளிவாகின்றது.

சம்பாஷணை - உரையாடல்

மங்கொண்டாரின் வீட்டில் திருமண ஏற்பாடுகள் செய்வதால் அவ்வூரிலுள்ள பெண்கள் அவரின் வீட்டில் புளியாய் வந்து அடைந்து கிடக்கிறார்கள். அப்போது அவர்களுக்குள் சம்பாஷணை செய்து கொள்கிறார்கள் என்று கூறுகிறார் ஆசிரியர். **"சம்பாஷணை"** என்றால் உரையாடல் என்று பொருள் விளங்குகிறது.

முடிவுரை

பொறுப்பு நாவலில் பல வட்டார வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய வழக்குச் சொற்கள் இந்நாவலின் கதையை மேலும் மெருகூட்டி உயிர்ப்புடன் திகழச் செய்கின்றன. தஞ்சை மண் சார்ந்த எதார்த்த வாழ்வியல் வழக்காற்றியலை இந்நாவல் பதிவுச் செய்துள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. வகுப்பு வாத வரலாறும் இராமரின் அயோத்தியும், 2015, ப.1.
2. பொறுப்பு (நாவல்), 2015, ப.9.
3. மேலது, ப.9.
4. மேலது, பக்.9-10
5. மேலது, ப. 10.
6. மேலது, ப. 10.
7. மேலது, பக். 10-11.
8. மேலது, ப. 18.

9. மேலது, ப.24.
10. மேலது, ப.26.

துணைநூற்பட்டியல்

1. ஆர், எஸ், சர்மா. *வகுப்பு வாத வரலாறும் இராமரின் அயோத்தியும்*. முதல் பதிப்பு, சென்னை, அலைகள் வெளியீட்டகம், 2015.
2. சி, எம், முத்து. *பொறுப்பு (நாவல்)*. முதல் பதிப்பு, சென்னை, பாவை பிரிண்டர்ஸ், 2015.

REFERENCES

1. R, S, Sharma. *Communal History and Rama's Ayodhya*. First Edition, Chennai, Alaigal Publishers, 2015.
2. C, M, Muthu. *Poruppu (Novel)*. First Edition, Chennai, Pavai Printers, 2015.